


# ளியின் சரீரம்

ல குறிப்புகள்

மாரி மகேந்திரன்

JPL
C13417

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியின் சரீரம்

## சில குறிப்புகள்

13417 CC
Public Library
Jaffna
03 MAR 2021
KOHA
JPL

மாரி மகேந்திரன்

281590
281590 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111

மாரி மகேந்திரன் மத்தியமலைநாட்டில் பொகவந்தலாவ என்ற இடத்தில். தகப்பன் ஒரு வியாபாரி. கல்வி கற்றது கண்டி அசோகா வித்தியாலயத்தில். **1996** ஆம் ஆண்டு சினிமா துறையில் ஒரு இயக்குனராக வரவேண்டும் என்ற தாகத்தில் சென்னைக்கு சென்று ஒன்பது வருடங்களாக சினிமா கலை இலக்கிய துறையில் செயற்பட்டார். இவரது சிறுகதை நூல் ஒன்றும், நமக்கான சினிமா என்ற சினிமா கட்டுரை நூல், இரும்பு நகரம் என்ற கவிதை நூல், தமிழகத்தில் வெளியானது. இலங்கையில் முதல் முறையாக வெளியாகும் கவிதை நூல் இது.


ஒளியின் சரீரம் சில குறிப்புகள்/ மாரி மகேந்திரன்/இல. 02, கோயில் வீதி, பொகவந்தலாவ, இலங்கை/ முதற்பதிப்பு: மார்கழி 2020/ ©மாரி மகேந்திரன் / அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 40/ விலை: 150.00/ அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி./ தொலைபேசி:0716089428

Oliyin saareeram sila kuripukal / Maarie Mahendran/No. 2, Temple Road, Bogawantalawa, SriLanka./ First Edition: December 2020/ © Maarie Mahendran / Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 40 / Price: 150.00/ Printed at Baranee Printers, Nelliady. Tel: 0716089428



Mail : mariemahendran134@gmail.com

Blog :https://cinemaanm.wordpress.com/



ISBN: 978-955-0958-54-2

ஜீவநதி வெளியீடு – 167




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதின் மொழி...

வாழ்க்கை என்பது மனது எழுதும் வரைப்படம், என்பதுதான் சரியான புலப்பாடாக இருக்க வேண்டும். மனதின் மொழியை கற்றுக்கொள்ள இங்கே நமக்கு அவசரமான வாழ்க்கை அவகாசம் தருவதில்லை. அந்த மொழியை ஒருவன் விசாரணை செய்யும் நாளில் அங்கே படைப்பாளியும் வரலாம் சிலநேரங்களில் பைத்தியக்காரனும் வரலாம். குறிப்பாக கவிதை என்பது மனதின் அகசலனம்.

மனம் ஒரு குரங்கு என்று தமிழ் பழமொழி சொன்னாலும் மனம் ஒரு நிலம் என்று பைபிள் மிக அழகாக சொல்கிறது. அந்த மனம் எனும் நிலத்தில் சத்துரு வந்து களையை விதைக்கிறான் என்றும் கூறுகிறது. சத்துரு என்பது எதிர்மறையான எண்ணங் களே.

"மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்."

என் மனதும் வாழ்க்கை தரும் இருளில் வீழ்ந்துவிடும் தருணங்களில் கவிதைகள் வந்து அவ்வப்போது ஆத்மாவை சுத்திகரிக்கிறது. கவிதை எனது மனதின் ஜெபம். ஜெபிக்காத நாட்கள் என்பது ஏதோ ஒன்றை இழந்ததுபோலவே இருக் கின்றது. அதுபோலவை எழுதும் போதும் மனது சுத்திகரிக்கப் பட்ட அதிகாலை மலரும் பூக்களை போலவே சுகந்த வாசனையாக ஆகிவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கவிதைகள் எனது மனதின் மொழிகள். யாரோ ஒருவர் என் அறையில் வசிப்பதற்கு அனுமதிக்க விடாமல் என் மனதின் அறைகளில் நான் மட்டுமே வாழ்வதற்கும்,

நான் யார்? நான் எதற்காக இங்கே வைக்கப் பட்டுள்ளேன்?

எனது மரணம் மற்றும் பயணம் எதை நோக்கி என்ற பேரறிவை பெற்றுத்தரும் ஆத்ம ஞானமாக இந்த கவிதைகளும், எனக்கு ஆதியில் இருந்த வார்த்தை மாம்சமாகி என்னை வழிநடத்தி வருவதனால் இப்போது எழுதுகிறேன், பேசுகிறேன், வாழ்கிறேன், சிரிக்கிறேன்.

இந்த தொகுப்பை வெளியிட கேட்டபோது சம்மதித்த அன்பு சகோதரன் பரணீதரனுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். சில கவிதைகளை வெளியிட்ட இதழ்களுக்கும் இந்த புத்தகம் வெளியாவதற்கு உறுதுணையான அனைவருக்கும் எனது நன்றிகள்.

அன்புடன்,
மாரி மகேந்திரன்.
26.11.2020.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

## குழந்தையின் பள்ளிக்கூடம்...

குழந்தைகள் சாமர்த்தியசாலிகளிடம்
தோற்று விடுகிறார்கள்
நாம் சாமானியனாக
இருப்பதற்காக...
நம் தாய் தந்தையர்களும்
சாமர்த்திய சாலிகள்தான்...
வீட்டின் இருப்பில் குழந்தைகளின்
நடமாற்றம் மட்டுமே
கடவுளின் பிரசன்னத்தை சொல்லுகிறது..
எல்லா குழந்தைகளும்
நம் வீடுகளிலிருந்து
வெளியேறி போயிருந்த
ஒரு துயர நாளில்
வீட்டுக்கு இனிப்பு பண்டங்களுடன்
வந்துசென்றவர்களுக்கு
மனதெங்கும் வியாதிகள் வந்து
வேதனை படுவதாக
கடிதங்கள் வந்துள்ளது...
எல்லாம் அறைகளிலும் குழந்தைகளை
அதட்டியவர்களின் பேச்சு சப்தங்கள்
அடங்கிய போது
விம்மி உறங்கும் செல்ல மகளை
ஏன் அடித்தேன் என்ற ஏக்கத்துடன்
நாளைக்கு உன்னை அடிக்கபோவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தீர்மானம்
நிறைவேறிய இளைப்பாறுதல் தந்து
எனக்கும் என் மகள் இப்போது
பள்ளிக்கூடமாக இருப்பதுதான் அதிசயம்...
தினமும் குழந்தைகளின் வருகையோடு
இருள் படர்ந்திருந்த என் வீடு ஒளிபடர்ந்து
துளிர்க்க தொடங்கியது
எல்லா துயரங்களையும் தள்ளிக்கொண்டு...

18.5.2005.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02
## நீள் இருக்கை...

வெறுமையுற்றிருந்த
நீள் இருக்கை
நீ ஒரு பக்கம் அமர்ந்திருந்தாய்...
சருகுகள் படர்ந்திருந்த
தூசியை துடைத்து
உன்னருகில் அமர்ந்தேன்..
நீ அப்போது தான் தூசி படர்ந்திருந்த
உன் பின்புறத்தை துடைத்தாய்...
நான் உன்னுடன் சேர்ந்து தட்டினேன்
நீ நெளிந்தாய்
வானத்தின் இருப்பு மெல்ல
நம் கையில் தவழ்ந்தது..
அப்போது
மறுபடியும் இருக்கையில்
இலை சருகுகளை மரம் உதிர்த்துவிட்டு
ஏக்கமாக பார்த்தது...
தனி தனியாக அந்த வனத்தில் இருந்த
மரங்களை பார்த்தபோதுதான்
யாரோ நம்மை பார்க்கிறார்கள்
என்று தோன்றியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03
## நான்...

உலகிலேயே
உன்னைத்தான் எனக்கு பிடிக்கும்...
உன்னுடன் பேசுவதும் மிகவும் பிடிக்கும்
ஆனாலும்
நான்
வேறு யாருடனோ
பேசிக்கொண்டு இருக்கின்றது
போலவே உள்ளது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04

## ஓர் சந்திப்பு...

இரவல் வாங்கி சென்ற
என் புத்தகத்தை
மீண்டும் படித்துவிட்டதாக கூறி
திருப்பி கொடுக்கும் போது
உனது வாசனையை
புத்தகத்தில்
நான் ஒவ்வொரு முறையும்
தவறாமல் உணர்கிறேன்...
என்மேல் நீ
கொண்டிருக்கும் அன்புக்கு
நான் அருகதை இல்லாதவன்
போல ஒவ்வொரு சந்திப்புகளும்
எனக்கு சொல்கிறது..
ஆனாலும் நானும் உன்னைப்போல்
ஒரு அன்பானவளாக ஆகி போகும் முயற்சியை
நமது சந்திப்பின் பின்பு உறுதி பெறுகிறேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05**

கடக்க வேண்டிய
மீளாத பெரும்
காலத்தின் பாடுகளுடன்
தேயிலையின்
மலைச்சுவடுகள்
பனித்தடங்களை
ஒற்றையடிப் பாதைகளில்
மீளாத துயர்விடாத
பொழுதொன்றின் காயரணங்கள் அனுதினமும்
இன்னும்
நாளைய வாழ்வின்
வண்ணம் தேடி நடக்கின்றோம்...
வரிச்சை உருவி
கவ்வாத்து வெட்டி
சரிக்கப்படும் ஒரு புனித நாளில்
வருடும் காற்றை ஸ்பரிசித்து
புசிக்கும் தினம் ஒன்றில்
நிம்மதியான இருப்பை
தேடியலையும்
மனித வாழ்நிலையின்
எதிர்காலங்கள் இன்னும்....
கைகூடாத கொழுந்து கூடைகளை போலவே
கவிழ்க்கப்பட்டு இருக்கிறது..

26.09.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06
## சுய துளிகள்

இருளின் புதிர்
வழித்திடல்களில்
உன் விரிந்த மார்பின்
சுவரோவியங்கள்
என் குகைகளை சேர்த்து
சுயங்களையும்
தின்று தீர்த்தபடி
மூச்சின் அனல் வெளிகளில்
என் குறிவெறியின் தாபங்கள்
எல்லாவிதமான
நிர்பந்தங்களையும் முறியடித்து
வலுவற்றதொரு வாழ்வின்
போக்கிடமற்று
உயிர் துளிகள் வீணாகி
போனதொரு நிலையில்
முதுமையுறும் உடல்களின்
நர்த்தனங்கள்...
காமம் சேராத
வாழ்வின் காதல் முறிவின்
வழியற்ற வெளிகளில்
இனி யாருடனும்
என் செவிப்பறைகளில்
இசையற்ற வறண்ட
பாலைவெளிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசிகின்றது உயிரின்
கடைசி வரிகள்....
எல்லோருக்குமான
சுயதுளிகளுடன்
தேவைகளுடன் வாழ்வு
தன் போக்கை சிருஷ்டித்த போது
எல்லோருக்குமானதொரு
இலக்கையும் நாம்
இழந்து நிற்கின்றோம்...!
சகல தாபங்களுடன்
நீ மரணிக்கிறாய்
நான் நம் காதலின்
சுயம் நசிந்த முற்றுப்பெறாத புள்ளிகளை தேடி
ஒளியாண்டுகளை தாண்டி
வேர் தேடி அலைகின்றேன் என சக நீள்
கொடுக்குகளுடன்...

மூன்றாவது மனிதன்
(மார்ச 2006)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07
## கோரிக்கைகளுடன் முடியும் போராட்டங்கள்

சிறைவைப்பும், சித்ரவதைகளும்
மூச்சி திணற வைக்கும்
அலைச்சலுமாய் கழியும் நாட்கள்...
வர்க்க நலன் கொண்ட
நமது அரசியல் தலைவர்களின்
பொய் வாக்குறுதிகளின்
அவ நம்பிக்கைகளின்
முடிவை அவர்களின் முகத்தில்
காறி உமிழ்ந்து தெரிவிப்போம்
காலம் நிறைவுபெறுவதை...
தேயிலையை அறுக்கும்
கவ்வாத்தின் சீவிய கத்தியின்
பதத்துடன் நாம்
தனித்து தெரியாமல் போராடுவோம்...
முன் விரிந்து தொங்கும்
கரிய இருள் சார்ந்த
பயத்தின் பிடியை
கழற்றி எறிவோம்...
நாம் போராட வேண்டியதும்
நொருக்க வேண்டியதும்
கால்களினால்
மிதித்து மிதித்து
புதிய விடியலுக்கான
பரப்பை கட்ட வேண்டியதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு வகையான வேலிகள் உண்டு
மலைத்தமிழனின்
துயரை அழுதபடி
விடியும் டெவன் நீர் வீழ்ச்சியை
தலவாக்கலையை அழித்து
எழும் மேல் கொத்மலை திட்டங்கள்
சம்பவங்களின் கைகளை சுரண்டும்
தனியார் பண்பாட்டின் கம்பனிகளின்
தரகு முதலாளிகளின் சுரண்டல்கள்
சீனியும், அரிசியும் பருப்பும்
வாங்க முடியாது போகும்
விலைவாசி உயர்வுகள்...
எதிர்ப்புணர்வுப்
போராட்டங்களை
பட்டதாரிகளினதும்
நீண்டிருக்கும் நிலப்பரப்பில்
அடுக்குமாடி கட்டி
நம் ஆயுள் காப்புறுதி பணத்தினை
சுரண்டி எதிர்காலத்தை
சவக்குழிக்குள் தள்ளும்
மோசடிகளை...
நம்மை பிரித்து
சாதியாலும் வர்க்கத்திலும்
மேல் கணக்கு கீழ் கணக்கு
நடுக்கணக்கு என்று
சாதியின் படிநிலையை
இன்னும் குடியிருப்பின் பரப்பியிருக்கும்
பார்ப்பன மனு தர்மத்தை எதிர்த்து...
தோட்டக்காட்டான் என்றும்
டவுன் என்றும்
பேதங்களுக்கு எதிராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் போராட்டங்கள்
தொடருவோம்…
தூங்கும் துயர் மிகுந்த
என் மலை தமிழனே
உன் சிந்தனையின் சத்தியம் தேடும்
சத்தியவானின் சத்தம் கேட்கும் பாடலுடன்
இருப்பை வீரியமாக்கி போராடு…
ஆயுதங்களாலும்
இன்னும் பிற நிழல் போர் முறைகளும்
நம்மை ஒடுக்கும் நமது எதிரிகளை
ஆயுதங்களினால் மட்டும்
போராடி வெற்றி பெற்றிருக்க முடியாது!
நாம் பரந்து விரிந்த
கல்வியை சிந்தனையின்
உயர்வை எதையும்
ஏன் எதற்கு என்று
கேட்க சொன்னவர்களின்
முனைப்புடன்
பாவங்களைப் பற்றிய
பேரறிவே கல்விஞானம்…
அன்பின் பாதங்களை நோக்கிப்
பயணிக்கும் வாழ்வு மட்டுமே நம்
முன் விரியும்
ஒடுக்குமுறைகளை எல்லாம்
மீறி நாம் இந்த மகத்தான
பனிபடர்ந்த பச்சை மலைகளை போல
கம்பீரமாக எழுந்து
நிற்க முடியும்…
போராடு தமிழனே
முகமூடி அணிந்தவர்களின் முன்பு நீ
ஒப்பந்தங்களை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் உனது
சவக்குழிகளை நீயே வெட்டிவிட
ஏன் முனைகிறாய்...
நுட்பங்களினாலும் பிரிந்து
கிடக்கும் நாம் ஒன்றிணைந்து போராடுவோம்
எல்லா விதமான
அடக்கு முறைகளுக்கும்
எதிர்காலம்
எழுந்து நிற்போம்..

05.04.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08

முன்னொருநாளில்
நிழல் விம்பங்களின்
நெளியும் மனித
வதைகளின் மொழிகள்
நான் உட்பட
நீ பற்றிய
எல்லா ஓவியங்களும்
நெடிய துயரங்களுடன்
தீக்கறையாகி விட்டது
காற்றின்
மென் சலனத்தில்
விசிறிகளின் இடைவிடாத
நகர்வுகளில்
உன் சுருட்டை கூந்தலின்
அந்தரங்க இருட்டில்
உதடுகளின் ஸ்பரிசம்
என் கால்களின்
வழியும் உன்னுடனான
மழை பற்றிய தொலைபேசி
உரையாடல்கள்
மெதுவாக நம்மிலிருந்து
பிரியும்
மௌனங்களின்
துயர் வடுக்கள்

03 MAR 2021
281590



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதுவரை
உன் ஆழ்மன வெளியில்
என் நான் குறித்த
கனவுகள்
உடைத்தெறியப்படுகின்றது...
மிகவும்
நேசிக்கப்படுகின்ற
வாழ்வின்
நெடும் பயணத்தின்
தடை சுவர்கள்
சாதியின் பெயரால்
வன்முறைகளின்
வழிகளின் வழி
தீர்க்கப்படுகின்றது.
அற்பங்களை சுமக்க
வேணடிய
நிர்பந்தங்களுடன்
வாழ்வு என்முன்
வன்முறையுடன்

22.07.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09

நகரத்துடனான
கதவுகள் என் முன்பு
திறந்தபடி இருக்கின்றன...
முழுவதுமான அழைப்புகள்
தீர்ந்து
கைதுகளின் பயத்தில்
வெளியேற முடியாத
சிறைகள்
போர்களின்
வலிகளை நாம்
எங்கனம் தொலைப்பது...
ஓடித்திரிகின்றது
வெண்மேகத்தின்
ஓவியங்கள்
எங்கள் பாடுதான்
சகிக்கமுடியாதபடிக்கு
தினம் ஒரு
வன்முறையுடன்
அசையும்
பாம்பின் வாயில்
எச்சில் புதரில்
நசுங்கும் தீணியாக
தமிழனின் இருப்பு
கேள்விகளின் நெறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன குரோதங்கள்...
வெளியேறி விடாதபடிக்கு
என்
நாளின்
தடங்கள் அழித்து
தீர்க்கப்படுகின்றது
முற்றுப்புள்ளியின்
இடப்படும்
மரணத்தின் சாயல்
விடுதலைக்கான
விதைகளை
ஆழமாக விதைக்கின்றது.
பதற்றங்கள்
பெருமை வாழ்வின் முன்பு
கைதுகளும்
தடுத்து வைப்புகளும்
மிரட்டல்களும் - உயிர்
அச்சுறுத்தலுகளும்
படுகொலைகளும்
எம் கனவின்
வெலிகளை
தேடி நிர்பந்திக்கின்ற
நெடு நாளைய
கனவுகளின் முடிவுகள்
தென்படுகின்றது...

22.01.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

தலை நகரத்திற்கு சென்று
வரவேண்டும் என்கிற
ஆசைகள் கூட
சுருக்கப்பட்டு விட்டது
தேடுதல்களும்
சுற்றி வளைப்புகளும்
அடையாள அட்டைகளும்
மனிதனின் சுயங்களை
காப்பாற்றி விடமுடிவதில்லை!
எனது சிற்றூரில்
நாட் குறிப்பை எப்படியும்
தேடி விடுவேன் எனது
நம்பிக்கையுடன்
நான் திரைப்படங்கள்
பார்க்க முடியாதவனாய்
வீட்டின் இருள் அறைகளில்
சுய வலிகளின்
மிதக்கும் எண்ணங்களின்
மீளமுடியாதபிடியில்
சிக்கி சிதைக்கின்றது
நகரத்திற்கான அழைப்புகள்....
கவிதைகளின் இருப்பு
மங்கிய ஒளியில் நான் கொல்லும்
சுயவதையின் கதைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலை செய்து
மரிக்கும் மனதின் குறிப்புகள்
தாய் மடியில் கதறும் குழந்தையின் கதறலாய்...
ஒரு விரிந்த பார்வையுடன்
நடக்க முடியாமல்
தட்டு தடுமாறி விழுந்து
என் கால்களின் பயணங்கள்
மண் நோக்கி சென்று
நாளைய வாழ்வின்
நண்பனின் பேச்சற்ற
சினிமா காட்சிகளாக
தனித்து அலைகின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

தேயிலை மலை சூழ்ந்த இந்த
வாழ்வின் நெடும் பயணம் மட்டும்
முகில் கொண்ட நீல வானில்
கொழுந்து கூடைகளுடன்
தேசம் முதுகெழும்பாய்
எழுந்து நிற்கும் போது
உடலின் தீராத வேதனையின் முடிவை
இசைகளற்ற ஓசை
கடவுளின் முகம் பார்க்கும்
மன திரையின் உள்நோக்கிய மலர்
கூடங்களை விசுவாசிக்கும் என் மனதும்
தேடலை நோக்கி
சதா காலமும்...
கலீல் கிப்ரானின்
ஆத்ம ஞான கவிஞனை தேடி
நானும் பார்ப்பதற்கான
இஸ்ரேலிய மண்ணின் ஏக்கங்களுடன்
காத்திருக்கும் வேளைகளில்
உறுதிமொழி கூறும்
இயேசுவின் சீஷர்கள்
வருவதாக கூறி வராத போகும்
காரணங்களின் முன்பு
எப்போதும் இந்த நாட்களுக்கு உள்ள பாடுகளுடன்...
அம்மா அப்பாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளிகை கடைகளிலும் இருந்தவைகளையும்
ஏற்க முடியாத நிர்பந்தமான மனிதனையும்
முகமூடி அணிந்துகொண்டு
இன்றைய வேஷங்களை
தரித்து அனுதினமும்
நிரப்ப முடியாத
குற்றவுணர்வில் பொழுதுகளை
தீராத வேதனையில்
இயலாமையின் விளிம்பில்
உறங்கி கழிக்கும்
தற்சமயம்...
என் உளவியலில் இறுக்கம்
சூழும் மன வியாதியின்
பின் புறத்தினுள்
மருத்துவமனையின் நம்பிக்கையற்று
உதவிகளின் முன்பு
தேடலுக்கான காரணமற்று
வாழ்வை எழுதும் சினிமாவில்
தீராத ஆசைகளுடன்
மக்களை தேடும் கலைஞன்
தார்கோவ்ஸ்கியின் சம அளவுக்கு
வாழ்வை சினிமா சட்டகத்தினுள்
அடைந்து விட்டு சாக
வேண்டும் என்கிற வைராக்கியம்
மட்டும் மீதமாக
மிஞ்சியிருக்கின்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

இறுதிவரை வருவேன்
என்றவர்கள் விலகி செல்லும்
வரலாற்றின மன முறிவை
எங்கனம் நான் தீர்ப்பேன்
இறை மறுப்பு வாசியுடன்
படுக்கையறைகளுக்கும்
தீராத காமத்திற்கும்
அன்னை தெராசாவை போல்
காமத்தின் நவீன ஓவியத்தில்
எனது
ஓடி விளையாடிய பொழுதில்
அருகில் வசிக்கும் பெண்ணின்
உள்ளாடைகளை களவாடிய
நடுநிசி மழை இரவில்
முகட்டில் திருடனாய்
ஆன நாளில்
தைரியம் இப்போது எங்கே!
ஒவ்வொரு பெண்ணியமும்
நான் கற்க முடியாது
போன பால்வெளிகளின்
மார்பு காம்பின் யோனியின்
பாடலில்
இசை வரிகள்
எனது தாலாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் தழுவாத கரங்களாக
வாழ்வில்
விளிம்பிற்கு போனதன்
காரணம்தான் என்ன....
ஞானங்களின் சூழ்ச்சியாய்
மேலை தேயத்தின் காலனி மனிதனாக
மூலையின் திசுக்கள்
இன்றும் சுயம் நசுக்கப்பட்டு
திருடப்படுகின்ற வாழ்வின்
சாரமிழந்த சக்கையான
கவிதைகளுடன் மட்டும்
என்னையும்
உன்னையும் நம்
அனைத்தையும் மீட்டெடுக்க
ஒரு அவகாசம் ஏற்படுமாயின்
அதுவே போதும்...
00
மண்ணின் வாசனையை
சுயத்தை இங்கே
பரப்பிய நாளில் எல்லா
வன்முறைகளுடன்
முடிவை நாம் உலகிற்கு
அறிவித்தவர்களாக முடிவை
பற்றிய குழப்பமற்று
உலகில் சக மனிதனை
நேசிக்கும் காலத்திற்காக
பிரார்த்தனையுடன் மட்டுமல்ல என்னையும்
மீட்டெடுக்க வேண்டும்
உலகின் அழிவின் கைதியாக உருமாற்றப்பட்டுப் போனதினால்
பொய்மையின் சுவரோவியங்களாக
நான் என்னையே விற்பனை செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைத்து வரும் இந்நாளில்
முற்றும் துறந்து
ஒரு புதிய உலகின்
நாளில் நாம் மறுபடியும்
சந்திப்போம் அப்போது
நாம் நிறைவேறாத காதலின்
மிகுதியைப் பூர்த்தி செய்து
வாழும் உலகின் மீட்சிக்கான
சுயங்களை இட்டுச் செல்லும்
நாம் சிறு குழந்தைகளின்
சிரிப்பு சப்தத்தில்
என்னுடைய கவிதையும்
உன்னுடைய கவிதையும்
புணரும் நாளில் பிறக்கும் வாழ்வில் மீள்வோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

## கண்ணாடி அறைகள்

நீண்ட பொழுதொன்றின்
அறையெங்கும் பரவும்
சூரியனின் செங்கதிரின்
ஒளிநாளில் காற்றின் மொழி வரிகள்
வானத்தில் தனித்து பறக்கும்
பறவையின் தனிமை குரலில்
கையெழுத்தை திருத்தும்
நாள் ஒன்றில்
நிமிர்ந்த கனவொன்றின்
பயணிக்கும் தினபடி
நாளில் மனம் தேடும் புதிய உறவுக்கான
சந்திப்புக்களின் ஏக்கங்கள் மீதமாக..
செம்மைப்படுத்தும் வரிகளுடன்
சிரிப்பொலி பரவும்
அறையின் கண்ணாடி வளையத்தில்
மீனின் மாதிரியாக
கைதிகள் போல்
சப்தம் ஏதுமற்று
வழிப்போக்கனின்
தேடலாய்..
ஆறுதல் தரும்
வார்த்தையானவரின் ஸ்பரிசம்
கண்ணாடி அறைகளில்
தவித்த என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டுவந்து
வானில் நீலம் பூத்த தாரகையில்
நடுநிசி தனிமையில்
நான் மறுபடியும்
தொலைந்த சகலத்தையும்
மீட்டு கொண்டு
மீட்பரின் வாசனையான
அணைப்பில் இருப்பது மட்டுமே
நித்திய நினைவுகளின்
கவிதை பகிர்தலாக இருக்கும்
கடைசி வெளி...

03 MAR 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

## பாவம்.. குற்றவுணர்வு.. மரணம்...

ஒரு ஞானியின் காலடித்தடங்கள் பட்டு
நதியின் தண்ணீர் பாவமானது...
ஒரு வேசியின்
கண்ணீர்துளி விழுந்து
நதி புனிதமானது..
ஊரில் வாழும்
ஒவ்வொருத்தியும் குளித்து
தண்ணீர் கெட்டு போனது...
ஊருக்கு புரம்பே
இருந்த
ஒரு பிச்சைக்காரி
கால்களை கழுவிய போது
நதிக்கு இப்போது தூய்மையானது
போலவே உள்ளது...
அவர்கள் வந்து நதியில்
தண்ணீரைப்பார்த்து
வியந்தார்கள்...
இவர்கள் தன்னைத்தானேப் பார்த்து
தண்ணீர் விம்பங்களை கலைக்க
மனதின்றி திகைத்தார்கள்..

23.11.20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15
## 66 புத்தகங்கள்...

பலகாலங்களாக
மூடப்பட்டு கிடக்கும்
எனது அறையை திறக்க
அருகில் உள்ள அயலவர்களிடம்
திறப்பை கேட்டேன்
அவர்கள் தொலைத்துவிட்ட திறப்பை
தேடி தருவதாக கூறினார்கள்..
ஆகவே பலநாட்களாய் அவர்களுடன்
எனது அறையை பகிர்வதற்கு
நிர்பந்திக்கப்பட்டேன்...
ஒரு ஞானியிடம் எனது அறை சாவியை கேட்டேன்
அவர் ஒரு முறையை விளக்கினார்...
பாவிகளிடம் சாவி கிடைக்குமா
என்று தேடினேன்...
பாவம் அவர்கள் கதையும்
அதேபோல்...
ஊரில் உள்ள ஒரு மடாதிபதி
சந்தித்து கேட்டேன்...
மாலையில் பேசிய பிறகு
பார்க்கலாம் என்றார்கள்...
சிலர் தியானம் கடையில்
நிச்சயமாக கிடைக்கும் என்றார்கள்..
ஒருவரோ யோகாவை குண்டலினி
நேரத்தில் தேடு கிடைக்கும் என்றார்கள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளுகளை ஹோமங்களை சுமந்தும் ...
வாசிப்பும் எழுத்தும் சினிமாவும்
கம்யூனிச தோழமையும்
எதிலும் சாவி கிடைக்கவில்லை..
அறையை திறக்க என் சாவியை
தேடுவதை கைவிட்டு
புதிய வழிகளுக்கும் ஒருநாள்
முற்றுப்புள்ளி வைத்துவிட்டு
சும்மா இருந்தபோது
இஸ்ரேலிய ஞானிகளின்
புத்தகங்கள் என்னிடம்
ஒருவர் தந்து வாசியுங்கள்
நிச்சயமாக உங்கள் தொலைந்த சாவியை
கண்டறிய முடியும் என்றார்கள்...
66 புத்தகங்களை கொண்ட தொகுப்பை
வனாந்தரத்தில்
படித்துப்பார்த்தேன்...
அறை திறந்துகொண்டது...
ஆச்சரியம் ஆச்சரியம்
தோழி ஒருத்தி கேட்டாள்
உன்னை பற்றியும்
இஸ்ரேல் ஞானிகளுக்கு
எப்படி தெரியும் என்று..
எனக்கும் அவள் கேட்பது
உண்மையாகவே உள்ளது...
என்னைப்பற்றி எப்படி கிரேக்கம் ஹீபுரு
எழுத்துக்களில் முகவரி எழுதுவார்களா...?
ஆனால் அறையை திறக்க
இந்த அறுபத்து ஆறு புத்தகங்கள்
போதுமானது உண்மை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16
## இரட்சிப்பு...

ஒரே அறையில் கொஞ்சம்
உலக ஞானியும் இருந்தான்..
கண்ணாடி ஜன்னலில் வேடிக்கை
பார்க்கும் ஒரு வேசியும் இருந்தாள்...
சில சூதாடிகளும் வேசிகளும் வஸ்துகளை
திருடுபவர்களும் இருந்தார்கள்...
அறையில் சதா காலமும் யாரோ
பேசிக்கொண்டு இருப்பது தான்
சகிக்கமுடியாததாக இருந்தது...
எப்போதாவது வந்து போகும் நற்செய்தி
பணியாளர்களை
அறை அவ்வளவாய் வெறுத்தது...
மதபிரசங்கியை கூட
அறை தனக்கே தெரியாமல் அனுமதித்தது...
மருத்துவமனை பணிபுரியும் தாதிகளும்
அங்கே இருந்தார்கள்...
ஒருநாள் அந்த அறையின் கதவை
வந்து திறந்தார் இயேசு...
அப்போது
அவர் திறந்த அறையில்
யாருமே இல்லாமல் இருந்தது இப்போது...

23.11.20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17
## மனிதன் ஏங்குகிறான் உண்மைக்காக...

யாசகனுக்கு தரும் காய்ந்த
ரொட்டித்துண்டுகளை போலவே உண்மை
அவர்கள் முன்பு...
இரவும் பகலுமாக தேடி தேடி
ஒவ்வொரு மனிதனும் ஓடுகிறான்
எப்படியாவது உண்மையை காணும் தாகத்தில்...
தவிப்பிலும் கலக்கத்திலும் தடுமாற்றத்திலும்
சிலர் தேடும் வழியில் அகப்படும் சகல பாவங்களிலும்
விழுந்தும் புண்களுடனும்
காயங்களுடன் தேடிய படி...

வியாபாரம் செய்து
குடும்பத்தை நடத்தி கற்றுத்தேறி..
காதலில் காமத்தில் புதைந்து இன்னும் உண்மையை
எப்படியாவது தேடிவிடவே முனைகிறார்கள்...
ஆகவே....
உண்மையை சத்தியத்தின்
நித்திய ஒளியை
ஒரு உரையாடல் மூலமாக சொல்வதற்கு வந்தால்
என்னையும் என் சகோதரர்களையும்
பைத்தியக்காரர்கள் என்றும்
மதம்மாற்றிகள் என்றும்
தள்ளி வேறு விடுகிறீர்களே..

23.11.20.

281590


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

புணர்ச்சிகளின் அவா
துறவறவம் பூண்டதை
மறைக்க தற்சமயம் காரணங்கள்
எதுவுமே இல்லை
என்ற போதும்
அவ்வப்போது துணையின் மனஸ்தாபங்கள்
அவளையும் அறியாமல்
எனது பலகீனமான பகுதியை ஒருநாளும்
அவள் சாடியோ குற்றச்சாட்டு கூறியோ
என்னை கொன்றுவிடாமல்
ஒவ்வொரு நாளும்
எனக்கு உதவும் தருணங்களில்
அவளிடம் நான்
இயேசுவின் சாயலையே
பார்த்து திகைத்து போய்...
அனுதினமும் இயேசுவை
எனது நடைமுறையில்
சாயலாக்க முடியாமல்
காயங்களுடனும்
மன்னிப்பு ஜெபங்களுடனும்...
அவள் முன்பு நான்
அத்தனை காரியங்களிலும்
தோல்வி அடைந்துதான்
நிராயுதபாணியாக நிற்கிறேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வார்த்தையா
வாழ்க்கையா என்பது
தெரியாத அரிச்சுவடிகளில்
விதவிதமான எழுத்துக்களாக
பாலர் பள்ளி குழந்தைகள்
கூட்டத்தில் இன்னும் இருப்பதுதான் ...
துரிதமாக வெளியேறி
துடித்து முடித்த பிறகு
சுயநலத்துடன்
ரோஜாக்களுடன் இதழ்களில்
பனிதுளிகளை
சிதற விடாமல் தவிக்கும்
ஒரு கணப்பொழுதில்
நான் முகமூடி அணிந்து
படுக்கையில் குற்றவுணர்வு
பிதுங்கும் சுய நினைவில்..
விரல்களை யுத்தத்திற்கு பழக்கும் போது
அது சிலநேரங்களில் நான் வேசிகளின்
காமத்தின் இச்சைகளின் பாவங்களுக்கு
தப்பிய வழி இந்த பலவீனங்கள் மட்டுமே
நான் வீழ்ந்துவிடாமல் காத்துள்ளது என்பது வெளியே
சாட்சி பகிர முடியாத
ஒரு பரவசம் நண்பனே...

22.11.20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19
## எனது கதை...

செத்துவிட மட்டுமே மனது உந்தும் நேரம் அது..
காரணமே இல்லாமல் காயங்களில் தழும்புகள்..
மரணத்தின் நிழல் வாசலில் நிழலாடியபோது
கைதூக்கி விட ஆத்ம நண்பர்கள் யாரும் அருகில் இல்லை...
சென்னையில் உள்ள நண்பனுக்கு பேசி பழக
இடைவெளி நீண்ட காலங்களில்...
ஒரு அயலவரை சந்தித்து எனது கதையை சொன்னேன்...
அவராவது என் மீது பரிதாபமாக இருக்க மாட்டாரா என்று...
ஒரு வார்த்தை தான் முள்ளாய் தைத்து
மனதை தற்கொலை செய்து விட மட்டுமே தூண்டியது...
நெருங்கிய நேரங்களில் நெருக்கும் நேரங்களில்
அம்மாதான் தெய்வம்...
உடுதுணி கூட வாங்கி தந்து அன்பை காட்டாத
இரும்பு பாலைவனத்தை அம்மா
அப்போதும் அக்கறையாக கவனித்தபோதுதான்
அன்பின் முகவரியை அறிந்தேன்...
என்னைத்தேற்ற எதுவுமே போதாதபோது
இழுத்துசெல்லும் ஒரு இறைச்சி துண்டைப்போல
மரணத்தில் திசையில் தற்கொலை செய்து
மரிக்கவும் சும்மா முடியாது என்று நெருக்கிய
பணத்தை வாங்க சுறாங்கனி பாடலை பாடியவரின்
வீட்டின் நோக்கி மலைசுவடுகளில் கடந்த போது
ஆலேலூயா சத்தம் கேட்கும் ஒரு சிறிய சபையை நோக்கி
நினைவே இல்லாமல் நின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கதையை நானா சொன்னேன் என்று
தெரியாமலேயே சொல்லி நின்றேன்...
ஒரு ஜெபம் எனது குரங்குகளின் மனதிலிருந்து
ஆவிகள் அடுப்பு புகை போலவே வேளியேறியது...
ஓ...அதை எப்படி சொல்வேன்
ஒரு புத்தம் புதிய குழந்தை மனதாய் மாறிபோனேன்..
பாவங்களின் பாரத்தை யாரோ என்னிடமிருந்து
எடுத்துவிட்டது போலவே
உருமாற்றமடைந்து விட்டேன்..
பச்சை புழுவைப்போல இருந்த என்னை
வண்ணத்திப்பூச்சியாக்கிய அவர் யார் என்று
எனக்கும் தெரியவில்லை
எப்படி இப்படி ஆனேன் என்றும் தெரியாத
ஒரு மறுபிறப்பு அடைந்து ஆனேன் நான்...
இயேசுவை படங்களில் பார்த்து உள்ளேன்
இப்போது உள்ளே உள்ளார் இயேசு...
இதுதான் இவ்வளவு காலம் தேடினேன்...
வெண்பளிங்கு போலவே உள்ளம் பொங்கியது..
இது என்ன இலவசமாக இது சாத்தியமா...
சத்தியம் சகல விடுதலை
மனதுக்குள் இருந்த காயங்களை
இரத்தம் சுத்திகரிப்பு செய்து இப்படி ஆன கதை
அறிந்து அவரின் ஆணி பாய்ந்த அடிச்சுவடுகளில்
சாயலை தேடி பயணிக்கிறேன்...
ஆதலால் இதை சொல்கிறேன்...
இதை விட இரட்சிப்புக்கு இல்லை
வழியேதும் என்பதையும் தெரிவிக்கிறேன்...

21.11.20.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

## ஒளியின் சரீரம்...

ஒரு இமைப்பொழுது நேரத்தில்
நான் மறுரூபமாக்கப்படும்
அந்த ஒளியின் சரீரத்திற்காக ஏங்குகிறேன்...
சத்தியத்தின் ஞானங்களின் வெளிச்சத்தை
நம்மிடமிருந்து பிரிக்கும் சகலவிதமான
புரட்டும் வேத பாதைகளில் தப்பி பிழைத்து..
அழித்து அழிக்கும்
ஒவ்வொரு காலங்களில்
எதிரான போரிலிருந்தும்
ஒளியின் சரீரம்
இன்னும் மாசற்று இருப்பது என்ற
செய்தியில் நம்பிக்கையில்...
எனக்கும் பரிபூரண
நிச்சயம் உள்ளது...
திட்டவட்டமாக சத்தியம் இதுவே என்பதில்
அசையாத உறுதியும் உள்ளது..
ஏதோ ஒரு சித்தாந்த
சிந்தனை அல்ல இது ..
வாழ்க்கை பாதையில்
நடைமுறையில் இருந்து
எழுந்து வரும் உயிர் உள்ள
எனது சாட்சிகளும்
மாற்றங்களும்
என்னை வாழும் வகை காட்டி

03 MAR 2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து செல்லும்
ஆன்மீக வழிகாட்டி மட்டுமல்ல
வாழ்க்கை வரைப்படமும்
என்னிடம் உள்ளது...
ஆதலால் உறுதிப்படுத்தி
நிதானமாக சொல்கிறேன்..
நான் ஒரு கணநேரத்தில்
மறுரூபமான நித்திய வாழ்வுக்குள்
கடந்து பறந்து போவேன்...
பறவைகளின் சிறகுகளுடன்
இனி நானும் பறக்கும்போது
வரும் போகும் நாளில் வானமும் பூமியும்
எனக்கும் வசப்பட்டு விடும்
மகிமையின் சரீரத்தில்...

23.11.20.

Public Library
Jaffna

134177 CC

பொது சன நூலகம்
03 MAR 2021
மாநகர சபை
யாழ்ப்பாணம்

281590



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கவிதைகளும்
எனது மனதின் மொழிகள்.
யாரோ ஒருவர் என் அறையில்
வசிப்பதற்கு அனுமதிக்க விடாமல்
என் மனதின் அறைகளில்
நான் மட்டுமே வாழ்வதற்கும்,
நான் யார்?
நான் எதற்காக இங்கே
வைக்கப்பட்டுள்ளேன்?
எனது மரணம் மற்றும்
பயணம் எதை நோக்கி என்ற
பேரறிவை பெற்றுத்தரும்
ஆத்ம ஞானமாக இந்த கவிதைகளும்,
எனக்கு ஆதியில் இருந்த வார்த்தை
மாம்சமாகி என்னை வழிநடத்தி வருவதனால்
இப்போது எழுதுகிறேன்,
பேசுகிறேன்,
வாழ்கிறேன்,
சிரிக்கிறேன்.



ISBN 978-955-0958-54-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org